தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

*******

ஆணை எண்.040/2021
நாள்.20.12.2021

திரு.அ.முரளி,
ஜெயங்கொண்டம். – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்
ஜெயங்கொண்டம் நகராட்சி – எதிர்மனுதாரர்

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம், வேலாயுதம் நகர், 119D எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு.அ.முரளி என்பவரின் 09.04.2021 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 12.04.2021 அன்று பெறப்பட்டு, 40/2021 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரது மனு, விசாரணையின்போது அவர் அளித்த வாக்குமூலம், ஜெயங்கொண்டம் நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் அவருடைய வாக்குமூலம் ஆகியவை கவனமாக பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணுமாறு ஆணை வெளியிடப்படுகிறது:–

## ஆணை

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம், வேலாயுதம் நகர், 119D எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு.அ.முரளி என்பவர் தன்னுடைய புகார் மனுவில் கீழ்க்காணுமாறு புகார்களை தெரிவித்துள்ளார்:–

நான் ஜெயகொண்டம் நகராட்சிப் பகுதியில் கிரில் ஒர்க் பணி செய்து வருகிறேன். புதியதாக கட்டப்பட்டுள்ள நகராட்சி அலுவலக கட்டிடத்திற்கு கீழ்க்கண்டுள்ள பணிகளை மேற்க்கொள்ளுவது குறித்து திருமதி.க.அறச்செல்வி, ஆணையர் (பொறுப்பு) அவர்கள் என்னிடம் நேரில் அணுகி விலை விகிதம் விசாரித்தார்.

நான் ஜெயகொண்டம் நகராட்சி புதிய அலுவலக கட்டிடத்தில் கீழ்க்காணும் பணிகளை மேற்க்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் குறித்து திருமதி.க.அறச்செல்வி ஆணையர் (பொறுப்பு) அவர்களிடம் எடுத்துரைத்தேன்.

ஆனால், கீழ்க்கண்டுள்ள பணிகளை உள்ளூரில் உள்ள விலை விகிதத்தின் அடிப்படையில் பணிபுரியும் எலக்ட்ரிஷன், கிரில் ஓர்க்கர், பிளம்பர், பெயிண்டர் மற்றும் வால் பட்டி (Wall Wood Patty) கார்பென்டர் போன்றவர்களிடம் ஒப்பந்தம் மேற்கொள்ளாமல் வெளிப்படையான ஒப்பந்த விதிகளைமீறி உள்ளூர் செய்தித்தாளிலும் ஒப்பந்த புள்ளி விளம்பரம் வெளியிடாமல் பதிவுபெற்ற நகராட்சி ஒப்பந்தாரர்களிடம் ஒப்பந்த அறிவிப்பு வழங்காமல் நடப்பு சந்தை விலைவிகிதத்தைவிட 100 சதவீதம் கூடுதலாக மதிப்பீடு தயார் செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

மேற்கொண்ட பணியின் விபரம் வருமாறு:-

| வரிசை எண். | நகர்மன்ற தீர்மான எண் & நாள் | பணியின் பெயர் | மதீப்பிடு தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | 137/29.11.2019 | UPVC Windows & Ventilator | 8,81,877.85 |
| 2. | 138/29.11.2019 | Electrical Work | 8,72,077.00 |
| 3. | 139/29.11.2019 | Front Elevation | 8,64,727.80 |
| 4. | 140/04.12.2019 | Painting & Iron Grill Work | 8,23,791.28 |
| 5. | 141/04.12.2019 | Water Supply, Plumbing Works & Sanitary Work | 8,15,738.00 |
| 6. | 142/04.12.2019 | Door Wall Patty | 8,31,457.52 |
| 7. | 145/04.12.2019 | இரும்பு கேட்டு மற்றும் பெயர் பலகை | 10,00,000.00 |
| 8. | 146/04.12.2019 | UPVC தடுப்புசுவர் (G.F) | 10,00,000.00 |
| 9. | 147/04.12.2019 | UPVC தடுப்புசுவர் (F.F & S.F) | 10,00,000.00 |
| 10. | 148/04.12.2019 | Table & Cub Board | 10,00,000.00 |
| 11. | 173/14.02.2020 | பெயர் பலகை மற்றும் முகப்பு கேட் | 5,64,995.75 |
| 12. | 174/14.02.2020 | UPVC Partition (G.F) | 8,75,700.00 |
| 13. | 175/14.02.2020 | UPVC Partition (G.F & F.F) | 8,68,750.00 |
| 14. | 176/14.02.2020 | Table chair & Cub Board | 8,69,198.00 |
| 15. | மன்ற முன் அனுமதி மூலம் | கம்பி வேலி தோட்டம் அமைக்க | 1,50,000.00 |
| 16. | மன்ற முன் அனுமதி மூலம் | கொடி கம்பம் நட | 1,00,000.00 |

திருமதி.க.அறச்செல்வி நகராட்சி பொறியாளர் அவர்கள் தொழில் நுட்ப அனுமதி வழங்கிட ரூ.10,00,000/-க்கும் மட்டுமே தகுதியானவர். மேற்காணும் புதிய கட்டிட பணிகளுக்கான ஒப்பந்தங்களை ஒரே ஒப்பந்தப்புள்ளி மூலம் கோராமல் தனித் தனியாக பிரித்து நகராட்சிக்கு நிதி இழப்பினை ஏற்படுத்தியுள்ளார்.

மேலும், தனித் தனியாக பிரித்து ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் தனித் தனியே வெவ்வேறு ஒப்பந்ததாரர்களிடம் வழங்கப்படாமல் அலுவலக கட்டிட பணியை மேற்கொண்ட அதே

ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் திருமதி.க.அறச்செல்வி ஆணையர் (பொறுப்பு) அவர்கள் தனிப்பட்ட ஒப்பந்ததாரருக்கு Quid Pro Quo Basis என்ற அடிப்படையில் ஆதாயம் பெற்றுக்கொண்டு ஒப்பந்தத்தை வழங்கியுள்ளார். இந்த ஒப்பந்தம் வழங்கியதன் மூலம் ஆளும் கட்சி நகர செயலாளர் திரு.செல்வராஜ் மற்றும் மாவட்ட செயலாளர் திரு. தாமரை ராஜேந்திரன் அவர்களுக்கும் திருமதி.க.அறச்செல்வி டெண்டர் கமிஷன் வாங்கி கொடுத்துள்ளதாக தெரியவருகிறது.

மேலும், புதியதாக கட்டப்பட்டுள்ள நகராட்சியில் தனி கருவூலக அறையும், பதிவறையும் இல்லாமல் உள்ள சூழ்நிலையில், ஆணையர் அறையை போல் மிகவும் விஸ்தீரணமாக நகராட்சி பொறியாளர் அறையை மிகப்பெரிய அளவில் Wall Wood Patty அலங்காரம் செய்து நகராட்சி நிதியையும், நகர்மன்ற தீர்மான இயற்றும் அதிகாரத்தையும் தவறாக பயன்படுத்தி அதிகார துஷ்பிரயோகம் மற்றும் நிதி இழப்பினை திருமதி.க.அறச்செல்வி ஆணையர் பொறுப்பு அவர்கள் செய்துள்ளார்.

2. மேற்காணும் புகார்களை தெரிவித்த மனுதாரர் திரு.அ.முரளி அவர்கள் ஜெயங்கொண்டம் நகராட்சி ஆணையர் பொறுப்பு வகித்த திருமதி.க.அறச்செல்வி மீது நகராட்சி நிதியினை தவறாகப்பயன்படுத்தி அதிகார துஷ்பிரயோகம் செய்து உள்ளதற்கும் நகர்மன்ற தீர்மானம் இயற்றும் அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தியத்திற்கும் உரிய சட்ட விதிகளின்படி பொது நலன் கருதி நடவடிக்கை மேற்கொள்ளும்படி கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேற்சொல்லப்பட்ட மனுதாரரின் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள புகார்கள் சம்பந்தமான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற கடிதம் எண்.40/ந/2021 நாள்.22.06.2021ல் ஜெயங்கொண்டம் நகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்பட்டது. ஜெயங்கொண்டம் நகராட்சி ஆணையர் தன்னுடைய கடிதம் ந.க.எண்.4337/2021/இ1 நாள்.31.08.2021ல் கீழ்க்காணுமாறு தன்னுடைய அறிக்கையை சமர்ப்பித்துள்ளார்:-

4. புகார் மனுவில் குறிப்பிட்டுள்ளப்படி நகராட்சியில் தனி நபர்களான எலக்ட்ரீஷியன், கிரில் ஒர்க்கர், பிளம்பர், பெயிண்டர் மற்றும் வால் பட்டி கார்பெண்டர் ஆகியோர்களுக்கு தன்னிச்சையாக பணி வழங்க நகராட்சி ஒப்பந்த விதிகளின்படி வழிவகைகள் ஏதும் குறிப்பிடப்படவில்லை. மேலும், மனுதாரர் குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு தமிழ்நாடு பொது பணித்துறையால் அங்கீகரிக்கப்பட்ட விலை பட்டியலின் அடிப்படையிலும் அங்கீகரிக்கபடாத இனங்களுக்கு முறையாக உள்ளூர் சந்தை விலைக்கேற்ப விலைப்புள்ளிகள் பெறப்பட்டு (Local Market Rate) அதன் அடிப்படையில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தமிழ்நாடு ஒப்பந்த விதிகளின் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் மூலமே பணிகள் மேற்கொள்ளப்பட்டது. மேலும், மேற்கண்ட பணியானது தமிழ்நாடு சட்ட பேரவையில் 110 விதியின் கீழ் அறிவிக்கப்பட்ட பணி என்பதால் பணியினை விரைவில் முடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வர ஏதுவாக உயர் அதிகாரிகளின் அறிவுரைகளின்படி மனுதாரர் குறிப்பட்டுள்ள கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

- புதிய நகராட்சி அலுவலக கட்டிடத்திற்கு கூடுதல் பணிகள் (Painting and Iron Grill Work).
- குடிநீர் மற்றும் சுகாதாரப் பணிகள் (Water supply plumbing work and Sanitary Wall Patty)

- முகப்பு நிலைக்கதவு, நகர்மன்ற கூட்ட அறைக்கான கதவு, கூடுதல் பணிகள் (Wall Patty)
- புதிய நகராட்சி அலுவலக கட்டிட அனைத்து அறைகளுக்கும் UPVC Windows மற்றும் Ventilators பொருத்துதல்.
- புதிய நகராட்சி அலுவலக கட்டிடத்திற்கு கூடுதல் மின் பணிகள்.
- புதிய நகராட்சி அலுவலக கட்டிடத்திற்கு முகப்பு தோற்றம் (Front Elevation) பணிகள்.
- புதிய நகராட்சி அலுவலக கட்டிடத்தில் உட்புற அமைப்புகள் ஏற்படுத்துதல் மற்றும் நகராட்சி பெயர் பலகை (Brass Letter) அமைத்தல்.
- புதிய நகராட்சி அலுவலகத்தின் ஒவ்வொரு பிரிவு இருக்கைகளுக்கும் மரத்திலான தடுப்புகள் (Partition)அமைத்தல் மற்றும் மேசை சாமான்கள் சப்ளை பணிகள்.
- புதிய நகராட்சி அலுவலகத்தின் அனைத்து பிரிவுகளிலும் அலுமினியம் தடுப்புகள் (Partition)அமைத்தல் Wall Texture ஏற்படுத்துதல்.
- புதிய நகராட்சி அலுவலக கட்டிடத்தில் டேபிள், நாற்காலிகள் மற்றும் Cup Board அமைக்கும் பணிகள்.
- புதிய நகராட்சி அலுவலக கட்டிடத்தில் கம்பி வேலியுடன் கூடிய பசுமைத் தோட்டம் மற்றும் பாப்பாங்குளம் அண்ணா நகர் செல்லும் சாலையில் பழுதடைந்துள்ள சிறுபாலத்தினை அப்புறப்படுத்தி புதியதாக சிறுபாலம் அமைத்தல்.
- புதிய நகராட்சி அலுவலக கட்டிடத்தில் கொடிகம்பம் மற்றும் இதரப் பணிகள்.

5. மேலும், அலுவலக கட்டடப் பணிகள் முழு அளவில் முடிக்க வேண்டிய நிலையில் திருத்திய மதிப்பீடுகள் சந்தை மதிப்பீட்டிற்குள் தயார் செய்யப்பட்டு முறையாக தமிழ்நாடு ஒப்பந்தவிதிகளின் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்தாரர் மூலமே கட்டடப் பணிகள் விரைந்து மேற்கொள்ளப்பட்டது.

6. அலுவலக கட்டிடத்தில் கம்பி வேலி தோட்டம் அமைத்தல் பணியானது மாவட்ட ஆட்சியரகத்திலிருந்து போஷன் அபியான் திட்டத்தின் கீழ் கம்பி வேலியுடன் கூடிய பசுமைத் தோட்டம் அமைக்க அறிவுறுத்தப்பட்டது. இப்பணிக்கு தனியாக மதிப்பீடு தயாரிக்கப்படாமல் இப்பணியுடன் கூடுதல் பணியாக பாப்பாங்குளம் அண்ணா நகர் செல்லும் சாலையில் பழுதடைந்துள்ள சிறுபாலத்தினை அப்புறப்படுத்தி புதியதாக சிறுபாலம் அமைக்கும் பணியினை மேற்கொள்ள ரூ.2.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு பணி முடிக்கப்பட்டுள்ளது. ஆனால், மனுதாரர் சந்தை மதிப்பீட்டை விட 100% மடங்கு கூடுதலாக மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது என தவறான தகவ்லை அளித்துள்ளார். இது உண்மைக்கு புறம்பானதாகும் என்று ஆணையர் தெரிவித்துள்ளார்.

7. இம்முறைமன்ற நடுவ 16.11.2021 நாளிட்ட அழைப்பாணை மூலம் மனுதாரர் திரு.அ.முரளி மற்றும் எதிர்மனுதாரர் ஜெயங்கொண்டம் நகராட்சியின் முன்னாள் பொறியாளர் மற்றும் ஆணையர் (பொறுப்பு) பதவி வகித்த திருமதி.க.அறச்செல்வி ஆகியோர் இம்முறைமன்ற நடுவத்தில் 23.11.2021 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு ஆணையிடப்பட்டது.

23.11.2021 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் விசாரணைக்கு ஆஜரான மனுதாரர் திரு.அ.முரளி அவர்கள் கீழ்க்காணுமாறு தன் வாக்குமூலத்தை அளித்துள்ளார்.

ஜெயங்கொண்டம் நகராட்சியில் இரும்பு கேட்டு மற்றும் பெயர் பலகை வைத்தல், தடுப்புச் சுவர், கம்பி வேலி தோட்டம் அமைத்தல் மற்றும் கொடிகம்பம் நடுதல் போன்ற பணிகள்

வெளிப்படையான ஒப்பந்த விதிகளை மீறியும், இணையம் (online) மற்றும் உள்ளூர் செய்தித்தாளில் ஒப்பந்தப்புள்ளி குறித்த விளம்பரத்தை வெளியிடாமலும், நடப்பு சந்தை விலை விகிதத்தைவிட 100 மடங்கு கூடுதலாக மதிப்பீடு தயார் செய்தும் பணிகளை மேற்கொண்டுள்ளனர். மேலும், டேபிள், சேர் போன்ற அலுவலகத்திற்கான பொருட்கள் (Furniture) கட்டிடத்தை கட்டுவதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்ட ஒப்பந்ததாரரிடமே ஒப்பந்தப்புள்ளி வாங்கி, பொருட்களை வாங்கியுள்ளனர். இத்தகைய முறைகேடுகளுக்கு காரணமான ஜெயங்கொண்டம் நகராட்சி ஆணையராக பொறுப்பு வகித்த திருமதி.க.அறச்செல்வி என்பவர் மீது நகராட்சி நிதியினை தவறாக பயன்படுத்தி அதிகார துஷ்பிரயோகம் செய்ததற்காக அவர் மீது தக்க நடவடிக்கை மேற்கொள்ளும்படி முறைமன்றத்தை கேட்டுக்கொண்டுள்ளார்.

8. 23.11.2021 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் விசாரணைக்கு ஆஜரான எதிர்மனுதாரரான ஜெயங்கொண்டம் நகராட்சியின் முன்னாள் ஆணையர் (பொறுப்பு) திருமதி.க.அறச்செல்வி அவர்கள் கீழ்க்காணுமாறு தன் வாக்குமூலத்தை அளித்துள்ளார்.

ஜெயங்கொண்டம் நகராட்சியில் புதிய நகராட்சி அலுவலக கட்டிடத்தில் அனைத்து அறைகளுக்கும் UPSC Windows மற்றும் Ventilator பொருத்துதல், கட்டிடத்திற்கான கூடுதல் மின் பணிகள், கட்டிடத்தின் முகப்புத் தோற்றம் மற்றும் டேபிள், நாற்காலிகள் மற்றும் cup board அமைத்தல் போன்று 7 பணிகளை மேற்கொள்வதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன. மேற்கண்ட 7 ஒப்பந்தப் பணிகளுக்கான மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூபாய் 80 லட்சம் ஆகும். ஜெயங்கொண்டம் நகராட்சி ஆணையரின் செயல்முறை ஆணைகளின்படி திரு.பி.கருப்பையா என்கின்ற ஒப்பந்ததாரருக்கு மட்டுமே தனித் தனியாக பணிகள் பிரிக்கப்பட்டு 7 பணிகளையும் மேற்கொள்ளும் பொருட்டு பணி உத்தரவு வழங்கப்பட்டது. இது தொடர்பாக நகராட்சி நிர்வாக ஆணையரிடமோ அல்லது நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரிடமோ எவ்வித ஆணையும் பெறப்படவில்லை. மேலும், மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி கோரும்போது, மேல் அலுவலர்கள் அவசரமாக பணிகளை மேற்கொள்ளும்படி அறிவுறுத்தியன் பேரில், மேற்கண்ட ஒப்பந்தம் தொடர்பாக இணையத்திலோ அல்லது பத்திரிகையிலோ விளம்பரம் ஏதும் வெளியிடப்படாமல் நகராட்சி அறிவிப்புப் பலகையில் மட்டுமே ஒப்பந்தப் புள்ளி குறித்து தெரிவிக்கப்பட்டது.

மேலும் அவசர அவசியத்தை முன்னிட்டு டேபிள், சேர் போன்ற Furniture பொருட்களுக்கான விலைப் புள்ளிகளை அரசு நிறுவனமோ அல்லது மற்றவர்களிடமோ பெறப்படவில்லை என்பதையும் மேற்கண்ட கட்டிட ஒப்பந்ததாரரிடமே இப்பணிகளையும் மேற்கொள்ளும் பொருட்டு பணி ஆணைகள் வழங்கப்பட்டன என்றும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இதன் மதிப்பீட்டுத் தொகை ரூ.8.83 லட்சமாகும்.

மேற்கண்ட 7 பணிகளையும் மேற்கொள்வதற்கு மேற்கண்ட ஒப்பந்ததாரரிடம் ஒப்பந்தம் மேற்கொள்ளும்போது, ஒப்பந்த நிபந்தனையாக குறிப்பிட்ட காலத்திற்குள் அதாவது 7 நாட்களுக்குள் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும், அவ்வாறு செய்யத் தவறினால், அபராதத் தொகை வசூலிக்கப்படும் எனவும் எழுத்துபூர்வமாக தெரிவிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்ததாரர் குறிப்பிட்ட நாட்களில் பணிகளை முடிக்கவில்லை எனவும், மேலும் நிபந்தனைகளின்படி ஜெயங்கொண்டம் நகராட்சியால் மேற்கண்ட ஒப்பந்ததாரரிடம் அபராதத் தொகை ஏதும் வசூலிக்கவில்லை. இந்நேர்வு தொடர்பான ஒப்பந்தப்புள்ளி, நகராட்சி ஆணையரின் செயல்முறை ஆணை மற்றும் பணிகள் முடிக்கப்பட்டது தொடர்பான அலுவலக குறிப்பு போன்றவற்றின் நகலினை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

9. இந்நேர்வில் மனுதாரரது மனு, விசாரணையின் போது அவர் அளித்த வாக்குமூலம், ஜெயங்கொண்டம் நகராட்சி ஆணையரின் அறிக்கை, எதிர்மனுதாரரான ஜெயங்கொண்டம் நகராட்சியின் முன்னாள் பொறியாளர் மற்றும் ஆணையர் (பொறுப்பு) பதவி வகித்த திருமதி.க.அறச்செல்வி அளித்த வாக்குமூலம் ஆகியவை கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டன.

10. பரிசீலனையில் இந்நேர்வில் கீழ்காணும் முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாக தெரியவருகிறது:-

- ஒப்பந்த பணிகளை தனித்தனியாக பிரித்து வழங்கியது.
- நகராட்சி நிர்வாக ஆணையர் / மண்டல நிர்வாக இயக்குநரிடம் அனுமதி பெறாதது.
- பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களுக்கு ஒப்பந்தப்புள்ளி குறித்து அறிவிக்காது அறிவிப்பு பலகையில் மட்டும் ஒப்பந்தப்புள்ளி குறித்து தெரிவிக்கப்பட்டது. ஒப்பந்தபுள்ளி சம்பந்தமாக இணையத்திலோ அல்லது பத்திரிகையிலோ விளம்பரம் ஏதும் வெளியிடாதது.
- ஒப்பந்தப் பணிகள் குறித்த காலத்தில் முடிக்கப்படாததால் ஒப்பந்தத்தை ரத்து செய்ய தவறியது.
- டேபிள், சேர் போன்ற அலுவலகத்திலுள்ள பொருட்கள் (Furniture) TANSI மற்றும் KHADI அரசு நிறுவனத்திடம் வாங்காமல் தனியாரிடம் வாங்கியது.

11. எனவே, மேற்குறிப்பிட்ட முறைகேடான நடவடிக்கைகளுக்கும், இழப்பீடுகளுக்கும் பொறுப்பு நிர்ணயித்து, சம்பந்தப்பட்ட நகராட்சி அலுவலர்கள் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2021 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 20–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு.அ,முரளி,
119 D, வேலாயுதம் நகர்,
ஜெயங்கொண்டம், அரியலூர் மாவட்டம்.

2) ஆணையாளர்,
ஜெயங்கொண்டம் நகராட்சி,
ஜெயங்கொண்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

நகல்
முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
உதவி பதிவாளர்.
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்.